செய்தி வெளியீடு எண்:246 நாள்: 30.04.2017

**<u>தமிழக மக்களின் முன்னேற்றம் ஒன்றையே நோக்கமாக கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மக்கள் நலத்திட்டங்களை தொடர்ந்த சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.</u>**

**<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவல்லி, ஜலகண்டாபுரம், எடப்பாடி ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று செய்தியாளர்களிடம் தகவல்.</u>**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் இன்று (30.04.2017) எடப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவல்லி, ஜலகண்டாபுரம், செட்டிமாங்குறிச்சி, எடப்பாடி மற்றும் தாரமங்கலம் ஆகிய பகுதிகளில் பொதுமக்களிடம் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 1,350 மனுக்களை பெற்றார்கள். பெறப்பட்ட கோரிக்கை மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நங்கவல்லி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மாவின் அரசு மக்கள் நலனுக்காக அம்மா அறிவித்த அனைத்து மக்கள் நல திட்டங்களையும் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. தமிழக முதல்வராக பதவியேற்ற 73 நாட்களில் 1,570 கோப்புகளில் கையேழுத்த இட்டுள்ளேன். எந்த கோப்புகளும் நிழுவையில் இல்லாத வண்ணம் அரசு தொய்வின்றி செயல்படுத்தப்பட்டுவருகிறது. தமிழக மக்களின் முன்னேற்றம் ஒன்றையே நோக்கமாக கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மக்கள் நலத்திட்டங்களை தொடர்ந்த சிறப்பாக செயல்படுத்தி வருகிறது.

எடப்பாடியில் குடிநீர் பிரச்சனையை தீர்க்க மேட்டூர் கூட்டுகுடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டுவருகிறது. சேலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அனைத்து வளர்ச்சிப்பணிகளும் நிறைவேற்ற பட்டுவருகிறது.

சேலம் மாவட்டத்தை பொறுத்தவரை சாலை வசதி, குடிநீர்வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் மாநகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக அரபிக்கல்லூரியில் தொடங்கி மீண்டும் அரபிக்கல்லூரியிலேயே முடியும் வகையில் 54 கிலோ மீட்டர் அளவிற்கு ரிங் ரோடு அமைக்கப்படவுள்ளது. மேலும், சேலம் விமான சேவை இயக்கம் தொடர்வது குறித்து மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேட்டூரில் 16 கண் பாலம், பாதாளசாக்கடை திட்டம், தொப்பூர் முதல் பவானி வரை நான்குவழிச்சாலை, நங்கவள்ளி மற்றும் மேச்சேரி கூட்டுகுடிநீர் திட்டம் மற்றும் பல்வேறு பணிகள் செய்யப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் அமைச்சராக உள்ளபோதும் தற்போது முதமைச்சராக உள்ளபோதும் பல்வேறு திட்டப்பணிகளை நிறைவேற்றி உள்ளேன் வனவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, பாலிடெக்னிக் கல்லூரியும், எட்டிகுட்டை மேட்டில் ஆசிரியர் பயிற்சி பள்ளியும் தொடங்கப்படும்.

மேலும், தென்னையில் இருந்து நீராபானம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. 6 மாதத்தில் இத்திட்டம் நடைமுறைக்கு வரும். இந்த நீராபானம் விற்பனை மூலம் விவசாயிகள் பயனடைவார்கள் மக்கள் என்ன நினைக்கிறார்களோ அதைநிவேற்றும் அரசாக அம்மா அரசு செயல்பட்டுவருகிறது. 140 ஆண்காலம் இல்லாத வறட்சி தற்போது ஏற்பட்டுள்ளது எனவே குடிநீர் பிரச்சனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.எடப்பாடி.கே.பழனிசாமி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வா.சம்பத், இ.ஆ.ப., அவர்கள், சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர் திரு.ராஜா, ஓமலூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வெற்றிவேல், சார் ஆட்சியர், மேட்டூர் திரு.மேகநாதரெட்டி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.இரா.சுகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கே.கவிதா, சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.பால்பிரின்ஸிலிராஜ்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.சி.விஜய்பாபு, பேரூராட்சி உதவி இயக்குநர் திரு.ராஜேந்திரன் மற்றும் அனைத்து அரசுத்துறை முதன்மை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**